DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 115/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 10th day of January 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 05** | கிராமம் | : | |
| பெயர் | : | Dr.திரு. பெரோஸ்கான் | தாலுகா | : | இராமநாதபுரம் |
| த/ பெ. | : | சீனி முகம்மது | சமயம் | : | முஸ்லீம் |
| வயது | : | 38 | தொழில் | : | அரசு மருத்துவர் |

<u>நாள்: 10.01.2023</u>
<u>நேரம்: 11.50 .மு.ப.</u>

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் எலும்பு முறிவு பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் 06.04.2021ம் தேதி இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் அரசரசிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது இரவு 9.40 மணிக்கு 40 வயது மதிக்கத்தக்க முனீஸ்வரி என்ற பெண் சிகிச்சைக்கு வந்தார். அவரை நான் பரிசோதித்தபோது அடையாளம் தெரிந்த 2 நபர்கள் தன்னை தனது வீட்டில் வைத்து மரக்கட்டையால் தலையில் தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது தலையில் லேசான காயங்கள் தென்பட்டது. வேறு எங்கும் காயம் இல்லை என்று சொன்னார். அதனால் அவருக்கு தலைக்கு ஏற்பட்ட காயத்திற்கு CT Scan எடுக்க பரிந்துரை செய்தேன். அந்த CT Scan அறிக்கையை பார்த்தபோது மூளையில் எந்த ரத்தக்சிவோ எந்த பாதிப்போ ஏற்படவில்லை. தோலுக்கடியில் லேசான ரத்தக்கட்டு மட்டுமே இருந்தது. அதனால் அவரை பெண்கள் சிறப்பு பிரிவிற்கு உள்நோயாளியாக அனுப்பி வைத்தேன். மேற்படி அறிக்கையின் படி அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று நான் சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேடு அ.சா.ஆ 4 ஆகும். அதே நாளில் அதே தேதியில் அதே நேரத்தில் 17 வயது மதிக்கத்தக்க நாகபிரபு என்ற ஆண் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு சிகிச்சைக்கு வந்தார். அவரை நான் பரிசோதித்தபோது நெஞ்சில் காயம் இருந்ததது. அவருக்கு சிகிச்சை அளித்தேன்.

அவர் தன்னிச்சையாக மருத்துவமனையில் இருந்து சென்றுவிட்டார். அவருக்கு நான் கருத்து வழங்க இயலவில்லை. அவருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.5 ஆகும். மேற்படி சொன்ன காயம் கட்டையால் தாக்கினால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். 2வது சாட்சி நாகபிரபுக்கு ஏற்பட்ட காயம் நெஞ்சில் ஏற்பட்டுள்ளதால் அவர் கட்டையால் தாக்கப்பட்டதால் மேற்படி காயம் சாதாரண காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் சரிதான்.

**<u>எதிரிகள் தரப்பு கு.வி:</u>**

முனீஸ்வரி என்பருக்கு ஏற்பட்ட காயம் கீழே விழுந்தாலும் தலையில் அடிபட்டு அவ்வாறு காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். நாகபிரபு என்பருக்கு காயம் ஏதும் இல்லாததால்தான் அவரை உள்நோயாளியாக நான் சிகிச்சைக்கு சேர்க்கவில்லை என்றால் சரியல்ல உள்நோயாளியாக சேர்த்தேன் ஆனால் சிகிச்சை எடுத்துக்கொள்ளாமல் நாகபிரபு சென்றுவிட்டார். காவல்துறை மேல்அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்க்கிணங்க இவ்வழக்கில் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**ம.வி – இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.01.10 16:33:06 +0530